செய்தி வெளியீடு எண். 235 நாள். 30.04.2018

## மக்கள் குறை தீர்வு நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ,ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், மக்கள் குறை தீர்வு நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (30.04.2018) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பொது மக்களின் கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பெற்றுக் கொண்டார். மேலும், இக்கூட்டத்திற்கு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வருகை புரிந்த பொதுமக்கள் தங்களது தனிப்பட்ட குறைகளை நிவர்த்தி செய்யவும், உதவிகள் வழங்கிடவும் கோரி மனுக்களை அளித்தனர். இதில் நிலம் சம்பந்தமாக 71 மனுக்களும், சமூக பாதுகாப்பு திட்டம் 37 மனுக்களும், சமூக நலத்திட்டம் 4 மனுக்களும், வேளாண்மை / கால்நடைத்துறை / மீன்வளம் 2 மனுக்களும், ஆதிதிராவிடர் / பிற்படுத்தப்பட்டோர் நலம் 2 மனுக்களும், வேலைவாய்ப்பு 39 மனுக்களும், சட்டம் மற்றும் ஒழுங்கு 29 மனுக்களும், சான்றிதழ் 3 மனுக்களும், இதரதுறை 44 மனுக்களும், அடிப்படை வசதி / போக்குவரத்து / சுகாதாரம் 2 மனுக்களும், ஊரக / நகர்ப்புற வளர்ச்சி 14 மனுக்களும், கடனுதவி 7 மனுக்களும், கல்வி 4 மனுக்களும், குடும்ப அட்டை 4 மற்றும் இயற்கை இடற்பாடு 2 மனுக்களும் ஆக மொத்தம் 264 மனுக்கள் பெறப்பட்டது. இம்மனுக்களின் மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு, தகுதியுள்ள பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கிட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 4 நபர்களுக்கு நிதியுதவித்தொகையாக ரூ. 4 இலட்சத்திற்கான காசோலையினை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வழங்கினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு,சந்திரன், மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.ரா.சக்திவேல், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) திரு.சீ.ஜானகிராமன் மற்றும் அனைத்து துறை அரசு அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**